ஸ்ரீமதே இராமாநுஜாய நம:

# பெரியாழ்வார் திருமொழி 1-6
## மாணிக்கக் கிண்கிணி
(கைகொட்டி விளையாடுதல்: சப்பாணிப் பருவம்)

75 * மாணிக்கக் கிண்கிணி ஆர்ப்ப * மருங்கின் மேல் *
ஆணிப் பொன்னால் செய்த * ஆய்பொன்னுடைமணி **
பேணிப் பவள வாய் * முத்திலங்க * பண்டு
காணிகொண்ட கைகளால் சப்பாணி * கருங்குழல் குட்டனே
சப்பாணி (1)

76 பொன்னரை நாணொடு * மாணிக்கக் கிண்கிணி *
தன்னரையாடத் * தனிச் சுட்டி தாழ்ந்தாட **
என்னரை மேல் நின்றிழிந்து * உங்களாயர் தம் *
மன்னரை மேல் கொட்டாய் சப்பாணி * மாயவனே கொட்டாய்
சப்பாணி (2)

77 பன்மணி முத்து இன் * பவளம் பதித்தன்ன *
என் மணிவண்ணன் * இலங்கு பொற்றேட்டின் மேல் **
நின் மணிவாய் முத்திலங்க * நின்னம்மைதன் *
அம்மணி மேல் கொட்டாய் சப்பாணி * ஆழியங்கையனே
சப்பாணி (3)

78 தூனிலா முற்றத்தே * போந்து விளையாட *
வானிலா அம்புலீ * சந்திரா வாவென்று **
நீநிலா நின் புகழா * நின்ற ஆயர் தம் *
கோனிலாவக் கொட்டாய் சப்பாணி * குடந்தைக் கிடந்தானே
சப்பாணி (4)

79 புட்டியில் சேறும் * புழுதியும் கொண்டு வந்து *
அட்டி அமுக்கி * அகம் புக்கறியாமே **
சட்டித் தயிரும் * தடாவினில் வெண்ணெயும் உண் *
பட்டிக் கன்றே கொட்டாய் சப்பாணி * பற்பநாபா கொட்டாய்
சப்பாணி (5)

80 தாரித்து நூற்றுவர் * தந்தை சொல் கொள்ளாது *
போருய்த்து வந்து * புகுந்தவர் மண்ணாள **
பாரித்த மன்னர் படப் * பஞ்சவர்க்கு * அன்று
தேருய்த்த கைகளால் சப்பாணி * தேவகி சிங்கமே
சப்பாணி (6)

81 பரந்திட்டு நின்ற * படுகடல் தன்னை *
இரந்திட்ட கைம்மேல் * எறிதிரை மோத **
கரந்திட்டு நின்ற * கடலைக் கலங்க *
சரந்தொட்ட கைகளால் சப்பாணி * சார்ங்கவிற் கையனே
சப்பாணி (7)

82 குரக்கினத்தாலே * குரை கடல் தன்னை *
நெருக்கி அணை கட்டி * நீள்நீர் இலங்கை **
அரக்கர் அவிய * அடுகணையாலே *
நெருக்கிய கைகளால் சப்பாணி * நேமியங்கையனே
சப்பாணி (8)

83 அளந்திட்ட தூணை * அவன் தட்ட * ஆங்கே
வளர்ந்திட்டு * வாளுகிர்ச் சிங்க உருவாய் **
உளந்தொட்டிரணியன் * ஒண்மார்வகலம் *
பிளந்திட்ட கைகளால் சப்பாணி * பேய்முலை உண்டானே
சப்பாணி (9)

84 அடைந்திட்டு அமரர்கள் * ஆழ்கடல் தன்னை *
மிடைந்திட்டு மந்தரம் * மத்தாக நாட்டி **
வடம் சுற்றி * வாசுகி வன்கயிறாக *
கடைந்திட்ட கைகளால் சப்பாணி * கார்முகில் வண்ணனே
சப்பாணி (10)

85 * ஆட்கொள்ளத் தோன்றிய * ஆயர் தங்கோவினை *
நாட்கமழ் பூம்பொழில் * வில்லிபுத்தூர்ப் பட்டன் **
வேட்கையால் சொன்ன * சப்பாணி ஈரைந்தும் *
வேட்கையினால் சொல்லுவார் * வினை போமே (11)